பிற்பகல் 12-15

6. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் நவீன படப்பிடிப்புத் தளங்கள், அரசு மைய அச்சகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் நவீனமயமாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிகளையெல்லாம் வீழ்த்திய ஒரு வெற்றியை, தமிழக வரலாறு இதுவரையில் காணாத ஒரு வெற்றியை, இந்தியத் துணைக் கண்டமே வியந்து பாராட்டுகின்ற அப்படிப்பட்ட ஒரு மாபெரும் வெற்றியை (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலே பெற்று, இந்தக் கூட்டத் தொடரிலே 110 விதியின்கீழ் முதல் அறிக்கையில் இன்றைக்கு இரண்டு நலத் திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கின்றார்கள். அதற்கு நான் எனது பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

தமிழகத்திலே திரையரங்குகளையெல்லாம் திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களாக ஆக்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க கதைகளாலும், உணர்வுபூர்வமான பாடல்களாலும் தமிழகத்திலே ஒரு சமூகப் புரட்சிக்கு வித்திட்டவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை தமிழக மக்கள் ஒருபோதும் மறந்திருக்க முடியாது. அந்தத் தலைவருடைய வழியிலே, ஒரே அரசியல் வாரிசாக இருந்து, இன்றைக்கு மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்திலே ஒவ்வொரு நாளும் பல நலத் திட்டங்களை வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு காட்சி உலகம்தான் உலகை அப்படியே ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றது; காட்சி உலகம்தான் உலகை கையில்கொண்டிருக்கின்றது என்று சொல்லுகின்ற வகையிலே, ஒவ்வொரு வீட்டிலும் அந்தக் குடும்ப உறுப்பினர்களோடு கடைசி ஓர் உறுப்பினராக ஒரு தொலைக்காட்சிப் பெட்டி அந்தக்

கூடத்திலே வந்து உட்கார்ந்துகொள்ளும். அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அதுவும், ஒரு குடும்ப உறுப்பினரைப்போலவே, அவர்கள் வாழ்வோடும், மகிழ்வோடும், உணர்வோடும், சிந்தனையோடும் அன்றாட நடவடிக்கைகளில் இணைந்துபோய் இருக்கின்றது. அப்படிப்பட்ட காட்சி உலகத்தினுடைய அடிப்படைத் தேவைகளை, அவர்களுடைய நலன்களை பாதுகாக்கின்ற வகையிலே, மேம்படுத்துகின்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரில் இருக்கின்ற திரைப்பட நகரிலே வெற்றிடமாக இருக்கின்ற 2.50 ஏக்கர் நிலத்திலே 15 கோடி ரூபாய் அளவிலே திரைப்படத் துறையினருக்காக புதிய படப்பிடிப்புத் தளங்களை உருவாக்கி இருப்பது, நலிந்த திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும், வளர்ந்துவரும் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் மிகுந்த உற்சாகத்தையும், துணையையும் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்றத்திலேகூட நாம் பார்த்திருக்கின்றோம்; நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனைகளெல்லாம், அவர் பேசிய பேச்சுக்களெல்லாம் இரண்டே நாளில் இந்தச் சட்டமன்றத்திற்குப் புத்தகமாக வந்துவிடுகிறது. அவ்வளவு வேகமாக செய்தி விளம்பரத் துறையிலே செயலாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே அரசு அச்சகத்தை மேலும் மேம்படுத்துகிற வகையிலே, அங்கு நிரந்தரக் கட்டடத்திற்காக 29 கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது, பாராட்டுக்குரியது என்கிற வகையிலே என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

4. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 27–தொழில் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கையின்மீது விவாதம் தொடரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வரலாற்றில் ஒரு தனி மனிதன், குடும்பம், ஊர்,*